
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!
அல்லேலூயா !!

# மரணத்துக்குப்பின்...

சாது. C. செல்வ ராஜ் (ஐயா)



ஆத்மீக அப்பா சாது. C. செல்வ ராஜ் (ஐயா) அவர்கள்

# கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

***கர்த்தருக்குள் பிரியமானவர்களே!***

மரணம் என்பது ஒரு மனுஷன் தனது உலக வாழ்வை முடிக்கும் தருணமாகும் என்பதும், மரணம் மனுஷனின் உலக வாழ்வுக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்து விடுகிறது என்பதும் யாவரும் அறிந்ததே.

கர்த்தருடைய பரிசுத்த வேதமாகிய பைபிளில், சங்கீதம் 89:48-ல் “மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்?” என்பதாகவும், பிரசங்கி 8:8 -ல் “ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை” என்பதாகவும்; பிரசங்கி 7:2-ல் “விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்க வீட்டுக்குப்போவது நலம். இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்: உயிரோடிருக்கிறவன் இதைத்தன் மனதிலே சிந்திப்பான்” என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மரண நாள் என்பது உலக வாழ்க்கையின் முடிவு

நாள். விருந்து வீடு என்பது களிப்பு வீடு. துக்க வீடு என்பது மரண வீடு. ஆவியை விடுதல் என்றால் மரித்தல்.

மனுஷனுடைய உலக வாழ்வு என்பது: கொஞ்சக்காலம் கண்டு பின்பு காணப்படாமல் போகும் புகையைப்போல ஒழிந்துபோகும் வாழ்வு; அநித்தியமானதும், நிலையில்லாததுமான வாழ்வு. மனுஷனுடைய உலக வாழ்வின் முடிவுக்குப் பின் அதாவது மரணத்துக்குப் பின் இருக்கிறதான வாழ்வு தான் ஒழிந்து போகாத நிலையான நித்தியமான வாழ்வு. இந்த நித்தியமான வாழ்வு பாவிகளுக்கு ஒரு வகையாகவும், பரிசுத்தவான்களுக்கு இன்னொரு வகையாகவும் இருக்கிறது. எனவே இதைக்குறித்து தெளிவாக யாவரும் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## மனுஷன் யார்?
## எப்படிப்பட்டவன்?

மனுஷன் தேவனாகிய கர்த்தருடைய மகா மகிமையான சாயலின்படியும், ரூபத்தின் படியும் தேவனாகிய கர்த்தராலே, பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்டவன். தேவன் தமது ஜீவ சுவாசத்தை

அவன் நாசியிலே ஊதினதினால் மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 1:26, 27; 2:7). எனவே மனுஷனுக்குள்ளே அதாவது மனுஷனுடைய சரீரத்துக்குள்ளே ஒரு ஆத்துமா உண்டானது. எனவே மனுஷன் இரண்டு ஆளத்துவத்தை உடையவனாக இருக்கிறான். அவை :

(1) நாம் நம் கண்களால் காணக்கூடிய புறம்பான மனுஷனாகிய சரீரம்.

(2) நாம் நம் கண்களால் காணக்கூடாத உள்ளான மனுஷனாகிய ஆத்மீகம் (2 கொரிந்தியர் 4:16).

புறம்பான மனுஷனாகிய சரீரம் அதாவது மண்ணான சரீரம் அழிவுக்குரியது. உள்ளான மனுஷனாகிய ஆத்மீகம் ஒரு போதும் அழியாதது. அழிவுக்குரிய மண்ணான சரீரத்தையும், அழிவில்லாத ஆத்மீகத்தையும் உடையவன் மனுஷன். மிருகங்களும், பறவைகளும் மற்றும் சகல ஜீவராசிகளும் தேவனாகிய கர்த்தரால் உண்டாக்கப்பட்டும் அவை ஒன்றிற்குமே ஆத்துமா கிடையாது.

## ஆத்மீகம் :

அநேகர், தங்களுக்குள்ளேயே தங்களது கண்களால் காணக்கூடாத உள்ளான மனுஷனாகிய ஒரு ஆத்மீக மனுஷன் அல்லது ஆத்மீகம் காணப்படுகிறது என்பதை நம்புகிறதில்லை. தங்களது கண்களால் காணக்கூடாத பொருளாகிய காற்று இருப்பதை தங்களது கண்களால் பார்க்காமலேயே, இருப்பதாக நம்புகிறார்கள். தங்களது கண்களால் காணக்கூடாத பொருளாகிய மின்சாரம், அல்லது மின்சக்தி இருப்பதை தங்களது கண்களால் பார்க்காமலேயே, இருப்பதாக நம்புகிறார்கள். இன்னும் அநேக காரியங்களை பார்க்காமலேயே கேட்டவுடன் நம்பிவிடுகிறார்கள். ஆனால் அதே வேளையில், தேவன் தமது மகா வல்லமையான சக்தியினால் மனுஷனுக்குள்ளே உண்டாக்கி வைத்ததும், மனுஷன் தனது கண்களால் காணக்கூடாதபடி தனது சரீரத்திற்குள்ளேயே காணப்படுகிறதுமான உள்ளான மனுஷனாகிய ஆத்மீக மனுஷன் அல்லது ஆத்மீகம் தங்களுக்குள்ளே இருப்பதை மட்டும் நம்புகிறதில்லை. இது எப்படிப்பட்ட

ஆபத்துக்குரியதும் புத்தியீனமுமான காரியம் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டியதாகும்.

### இருவகை ஜனம்; இருவகை மரணம் :

உலகம் முழுவதிலும் காணப்படுகிறதான ஜனங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் பாவிகள். இன்னொரு வகையினர் பரிசுத்தவான்கள். பாவம் செய்கிறவர்கள் பாவிகள். பாவத்திலிருந்து விடுதலையாகிய இரட்சிப்பைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாலே பெற்று, பாவம் செய்யாமல் மெய்யான தேவனுடைய பிள்ளைகளாய் பரிசுத்தமாய் நடக்கிறவர்கள் பரிசுத்தவான்கள். இவர்களில் பரிசுத்தமும், நீதியும், நற்கிரியைகளும், தேவபக்தியும் காணப்படும். பாவம் என்றால் : பொய், களவு, ஏமாற்று, சதி, வஞ்சகம், பொறாமை, பொருளாசை, விரோதம், வைராக்கியம், சண்டை, கோள் சொல்லுதல், பகை, கோபம், கொலைபாதகம், துர்மோகம், துர்இச்சை, வேசித்தனம், விபச்சாரம், குடிவெறி, அடித்தல், உதைத்தல், போதைப் பொருட்களை உபயோகித்தல், களியாட்டுகள், சினிமா, டிராமா, சர்க்கஸ் போன்றவற்றை பார்த்தல், அநியாயம், அநீதி, அக்கிரமம், விக்கிரக ஆராதனை,

பேய் பிசாசுகளையும் அசுத்த ஆவிகளையும் கல்லையும் மண்ணையும் மரத்தையும் கும்பிடுதல், அல்லது வணங்குதல் மந்திரவாதம், பில்லிசூனியம், பரிதானம் வாங்குதல், அசுத்தமான அவலட்சணமான கிரியைகளைச் செய்தல், சூரிய சந்திர நட்சத்திரங்களையும் மற்றும் பொருட்களையும் கும்பிடுதல் அல்லது வணங்குதல், யோகாப்பியாசம் போன்ற ஆகாத பயிற்சிகளை பயிற்றுவிப்பதும், பயிற்சி செய்வதும், இணையதளம் மூலம் ஆகாத காட்சிகளைப் பார்த்தலும், படித்தலும் இவைகளாகும். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களே பாவிகள். (1 கொரிந்தியர் 6:9, 10; ரோமர் 1:19-32; 2 கொரிந்தியர் 12:20, 21; எபேசியர் 5:5; 1 தீமோத்தேயு 1:9-11; தீத்து 3:3)

தேவனுடைய ஜனங்களாகிய கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தர் பார்வையில் அருமையானது. மகா பாக்கியமானது. (சங்கீதம் 116:15; வெளிப்படுத்தல் 14:13). இவர்கள் பாவத்தில் பிறந்த அந்த ஜனந நாளை (பிறந்த நாளை)ப் பார்க்கிலும் இவர்கள் பரிசுத்தவான்களாய் கர்த்தருக்குள் மரிக்கிற அந்த மரண நாள் நல்லது (பிரசங்கி 7:1). பாவிகளுடைய மரணமும், மரண

நாளும் கர்த்தருடைய பார்வையில் அருமையானதுமல்ல, நல்லதுமல்ல; தீங்குக்குரியது; அபாக்கியமானது; ஆபத்துக்குரியது.

## மரணத்துக்குப்பின் பாவிகளின் ஆத்மீகம் முறையிடுதல் :

மரணத்துக்குப்பின் பாவிகளின் புறம்பான மனுஷனாகிய சரீரம் மண்ணிலே அடக்கம் பண்ணப்பட்டு உருவழிந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது. அல்லது தகனம் பண்ணப்பட்டு மண்ணோடு மண்ணாகி விடுகிறது. ஆனால் உள்ளான மனுஷனாகிய ஆத்மீகம் அசுத்த ஆவியாக உலகத்திலே அதிகமதிகமாய் அலசடிபட்டு அலைய ஆரம்பிக்கிறது. இதற்கு அத்தாட்சியாக: சில அகால மரணமடைந்தவர்களும், தற்கொலை செய்து கொண்டவர்களும், அசுத்த ஆவிகளாய் அலைந்து, பலவிதமான தீய கிரியைகளையும் தீய தொந்தரவுகளையும் மனுஷர்களுக்கு வருவித்துக் கொண்டிருப்பதை நாம் யாவரும் அறிந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறாக மரணத்துக்குப்பின் பாவியாய் மரித்த ஒரு மனுஷனுடைய ஆத்மீகம், கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நாள் அல்லது 'நடுத்தீர்ப்பு நாள்'வரையிலும் அசுத்த ஆவியாய் அலசடிப்பட்டு அலசடிப்பட்டு, அலைந்து அலைந்து, துக்கமடைந்து துக்கமடைந்து "ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே!" (நீதிமொழிகள் 5:11-14) என்றும், இன்னும் பலவாறாகவும் முறையிட்டுக் கொண்டேயிருக்கும்.

## மரணத்துக்குப்பின் பரிசுத்தவான்களின் ஆத்மீகம் இளைப்பாறும் பரதீசு:

மரணத்துக்குப் பின் பரிசுத்தவான்களின் புறம்பான மனுஷனாகிய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டு உருவழிந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது. ஆனால், இவர்களது உள்ளான மனுஷனாகிய ஆத்மீகம், மூன்றாம் வானமாகிய பரதீசுக்குள் கர்த்தரால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் மரிக்கும் பரிசுத்தவான்களது

ஆத்மீகமானது இந்த உலகத்தில் அலைந்து திரியும்படி கர்த்தர் விடுகிறதில்லை. இவர்களது ஆத்துமா உலகில் காணப்படுகிறதுமில்லை. இவர்களது ஆத்துமா மூன்றாம் வானமாகிய பரதீசுக்குள், மிகவும் மகிழ்ச்சியோடும், அடக்கக் கூடாத சந்தோஷத்தோடும், சரீரத்திலிருக்கிறோமோ சரீரத்துக்குப் புறம்பே இருக்கிறோமோ என்று கூட அறியக்கூடாதபடி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களாகிய தமது சபையைக்கூட்டிச் சேர்க்க வரும் நாள் வரையிலும் இளைப்பாறிக் கொண்டு காணப்படும் (2 கொரிந்தியர் 12:1-4).

“பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று” (வெளிப்படுத்தல் 14:13).

## கர்த்தர் தமது பரிசுத்தவான்களாகிய சபையைக் கூட்டிச் சேர்த்தல்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்த சபையை (இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களாகிய தமது சபையை)க் கூட்டிச் சேர்க்க ஆகாயத்தில் வரும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்களின் ஆத்மீகம் மூன்றாம் வானமாகிய பரதீசில் இளைப்பாறிக்கொண்டிருக்கும். மரிக்காமல் உயிரோடு காணப்படும் பரிசுத்தவான்கள் இவ்வுலகத்திலே காணப்படுவார்கள். இயேசு கிறிஸ்து தமது பரிசுத்த சபையை எப்போது கூட்டிச் சேர்க்க வருவார் என்பது யாருக்குமே தெரிகிறதில்லை. நினையாத நேரத்தில் நினையா நாளில் யாருக்குமே தெரியாமல் வருவார் (மத்தேயு 25:13).

அப்பொழுது சம்பவிப்பதென்னவென்றால்: இயேசு கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்து அதாவது மரித்து பரதீசில் இளைப்பாறிக் கொண்டிருக்கிற பரிசுத்தவான்களின் ஆத்மீகம், அங்கிருந்து திடீர் என்று அதிவேகமாகக் கீழே இறங்கி, பூமியில் தங்களது சரீரம் அடக்கம் பண்ணப்பட்டு மண்ணோடு மண்ணாய்க் காணப்படும் அந்த இடத்துக்கு வரும்.

அப்படி அந்த ஆத்மீகம் வந்த உடனேயே அந்த மண்ணான அற்பமான சரீரம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகா மகிமையான சரீரத்துக்கொத்த மகிமையான சரீரமாய் அவருடைய மகா வல்லமையான செயலினால் மாற்றமடையும். உடனே அவர்கள் அழிவில்லாதவர்களாய் தங்களது மகிமையான சரீரத்தோடு உயிரோடு எழும்பி மத்திய ஆகாசத்தில் வெளிப்பட்டு நிற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் அவருடைய வல்லமையினால் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இவ்விதமாக மரித்துப்போன பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவதே **முதலாம் உயிர்த்தெழுதலாகும்.** இதில் மரித்துப்போன பாவிகள் ஒருவருமே உயிர்த்தெழமாட்டார்கள்.

மேலும், உயிரோடு இந்த உலகத்தில் காணப்படும் பரிசுத்தவான்களின் சரீரமும் உடனேயே மறுரூபமடைந்து, இயேசு கிறிஸ்துவின் மகா மகிமையான சரீரத்துக்கொத்த மகிமையான சரீரமாக மாறும். அப்பொழுது உடனேயே இவர்களும், மரித்து உயிர்த்த பரிசுத்தவான்களோடு கூட மேகங்கள் மேல் ஆகாயத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

இந்த சம்பவங்கள் எல்லாம், கடைசி தேவ எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே சம்பவிக்கப்போகும் மகா மகிமையான, மகா சத்தியமான சம்பவங்களாகும். (1தெசலோனிக்கேயர் 4:13-18; பிலிப்பியர் 3:21; 1கொரிந்தியர் 15:51-54).

பின்பு கர்த்தருடைய சபையாராகிய சகல பரிசுத்தவான்களும், கர்த்தரால் அவர்களுக்காக வானத்தில் விசேஷமாக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கும் ஓர் ஸ்தலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட ஏழு வருஷம் இருப்பார்கள் (யோவான் 14:2,3).

## மகா உபத்திரவத்தின் காலம் :

கர்த்தருடைய சபையாகிய சகல பரிசுத்தவான்களும், மிகவும் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் அந்த ஸ்தலத்தில் இயேசு கிறிஸ்துவோடு கூட இருக்கும் வேளையில், பூமியில் காணப்படும் பாவிகளான ஜனங்களுக்கு, உலகம் உண்டானது முதல் இதுவரையிலும்

சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் ஏழு வருஷம் உண்டாயிருக்கும். இதில் மூன்றரை வருடம் அந்திக்கிறிஸ்துவின் மகா உபத்திரவம் நிறைந்த அரசாட்சியும் நடக்கும் (மத்தேயு 24:21).

## பரிசுத்தவான்களின் ஆயிரவருட அரசாட்சி :

மேற்குறிப்பிட்டபடியுள்ள ஏழு வருஷமும் முடிந்த பின், கர்த்தர் தமது தூதனைக் கொண்டு சாத்தானைப் பிடித்து, பெரிய சங்கிலியினால் கட்டி, பாதாளத்துக்குள்ளே தள்ளி அடைத்துப் போடுவார். அதன் பின்பு தம்மோடிருக்கும் தம்முடைய பரிசுத்தவான்களாகிய தமது சபையாரோடு, இந்தப்பூமிக்கு இறங்கி வருவார். தேவனுடைய ஜனங்களான பரிசுத்தவான்கள் ஆசாரியராயிருந்து இந்த உலகத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வார்கள். மகா சமாதானமும், மகா நீதியும், மகா நேர்மையுமான நல்ல ஒரு அரசாட்சி ஆயிரம் வருடம் இந்த உலகத்தில் தேவனுடைய ஜனங்களாகிய பரிசுத்தவான்களைக் கொண்டு நடக்கும். அப்பொழுது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமான கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் மகா மகிமையான அரண்மனை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். அவருடைய பிள்ளைகளாகிய பரிசுத்தவான்கள் உலகெங்கும் ஆளுகை செய்வார்கள் (வெளிப்படுத்தல் 20:1-6). கர்த்தர் அவர்களது ஆளுகையைப்பார்த்து மகிழுவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

ஆயிர வருட அரசாட்சியின் போது இவ்வுலகத்திலே உயிரோடு காணப்படும் பாவிகள், பரிசுத்தவான்களுடைய பண்ணையாட்களும் பணிவிடைக்காரருமாயிருப் பார்கள் (ஏசாயா 61:5-7). அப்பொழுது "ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும், சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடு உண்டாக்குவதுமில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 65:25). "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:6-9).

தேவனுடைய ஜனங்கள் தங்களது மகா மகிமையான சரீரத்தின் வல்லமையால் உலகத்தில்

எங்கு வேண்டுமானாலும் பறந்து போவார்கள். தங்களது மகா மகிமையான கண்களின் வல்லமையால், எருசலேமிலே வீற்றிருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, தாங்கள் எங்கிருந்தாலும் காண்பார்கள். இவர்கள் மகா பாக்கியவான்கள். இவர்களைப் போல மகா பாக்கியசாலிகள் வேறு எவருமேயில்லை. இந்த ஆயிரம் வருட அரசாட்சி முடிந்ததும், மீண்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களாகிய தமது சபையோடு ஆகாயத்துக்கு ஏறிச் செல்வார். அல்லேலூயா!

**பிசாசு அல்லது சாத்தானுக்கு நியாயத்தீர்ப்பு :**

ஆயிர வருட அரசாட்சிக்குப்பின் கர்த்தராகிய இயேசு சாத்தானைக் கொஞ்ச காலம் விடுதலையாக்குவார். பின்பு அவனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் வானத்தின் அக்கினியால் பட்சிப்பார். அதன் பின்பு அக்கினியும் கந்தகமும், எரிகிற கடலாகிய நரகத்திலே அவன் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்பட்டு, மகாவேதனையடையும்படி அவனை அதற்குள்ளே தள்ளி விடுவார் (வெளிப்படுத்தல் 20:7-10).

## கர்த்தர் பாவிகளை நியாயந்தீர்க்க வருதல் :

மகா உபத்திரவத்தின் நாட்களும் ஆயிர வருட அரசாட்சியும் முடிந்த பின்பு சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். வானத்தின் நட்சத்திரங்கள் விழும். வானங்களிலுள்ள சத்துவங்கள் அசைக்கப்படும். சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்து சந்திரன் இரத்தம் போலாகும். இதனால் பூமியின் தன்மையும் மாறிவிடும் (மாற்கு 13:24, 25; வெளிப்படுத்தல் 6:12, 13). சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். பூமியிலுள்ள பாவிகளுக்கு தத்தளிப்பும் இடுக்கணும், ஆபத்து களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மிகுந்த இருதயச் சோர்வும் உண்டாகும் (லூக்கா 21:25, 26).

மேலும், மனுஷ குமாரனாகிய கிறிஸ்து இயேசு மகா பயங்கரமான நியாயாதிபதியாக, இதோ ஆகாயத்தில் வெளிப்படப் போகிறார் என்பதைக் குறிக்கும், மகா பயங்கரமானதும் எவனும் பயந்து நடுநடுங்கத் தக்கதுமான அடையாளம் வானத்தில் காணப்படும். “அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப்

பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" (மத்தேயு 24:30).

"இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்" (வெளிப்படுத்தல் 1:7).

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்". (மத்தேயு 24:27).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவிகளுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் படியாக பகிரங்கமாக ஆகாயத்தில் வெளிப்பட்டவுடனே: பாவிகளாய்க் காணப்பட்டு மரித்து, ஆத்மீகத்துக்கு இளைப்பாறு தலற்று முறையிட்டுக் கொண்டிருக்கும் பாவிகளுக்கும், உலகத்திலே உயிரோடு காணப்படுகிற பாவிகளுக்கும் நரகத்திற்கேற்ற ஒரு சரீரம் கொடுக்கப்படும். இவர்களெல்லாரும் நியாயாதி பதியாகிய இயேசு, மகா பயங்கரமானவராய் மேகங்கள்

மேல் வருகிறதைப் பார்த்து, மகா சத்தமாய்க் கூக்குரலிட்டு அழுது, புலம்புவார்கள். அவரைக் குத்தினவர்களும், அவரை அடித்தவர்களும், அவரை அவமானப்படுத்தினவர்களும், அவரை ஏசிப் பேசித்தூஷித்தவர்களும் அவரைக் கொலை செய்தவர்களும் அவரைக் காண்பார்கள். கூக்குரலிட்டு மகா சத்தமாய் அழுது புலம்புவார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்பின் சிங்காசனமாகிய பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில், மகா பயங்கரமான ரூபத்தோடும், மகா உக்கிர கோபத்தோடும், மகா பயங்கரமான நியாயாதிபதியாக வீற்றிருப்பார் (வெளிப்படுத்தல் 20:11). அப்பொழுது பாவிகளாய்க் காணப்பட்ட "பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும்,

ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக் கூடும்" என்பார்கள் (வெளிப்படுத்தல் 6:15-17). மகா பயங்கரத்துக்குரிய நிர்ப்பந்தமான நிலைமைதான் பாவிகளின் நிலைமை.

## கர்த்தர் பாவிகளை நியாயந்தீர்த்து நரகத்திலே தள்ளுதல் :

மேலும், நியாயாதிபதியாகிய கிறிஸ்து இயேசு தமது மகா மகிமையுள்ள வெள்ளைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். தமது ஜனங்களாகிய பரிசுத்தவான்களை அவர் தமது வலது பக்கத்தில் நிறுத்துவார். பாவிகளையோ தமது இடது பக்கத்தில் நிறுத்துவார். அப்பொழுது, அவர் தமது வலது பக்கத்தில் நிற்கும் தமது பரிசுத்தவான்களைப் பார்த்து: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பார். அவர் தமது இடது பக்கத்தில் நிற்கும் பாவிகளைப்

பார்த்து: "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் (மத்தேயு 25:31-46).

அதோடு கர்த்தராகிய கிறிஸ்து இயேசு பாவிகளை நியாயந்தீர்க்கும் போது: பாவிகள் ஒவ்வொருவரும் செய்த பாவக்கிரியைகள் அத்தனையும் குறித்துத் தானாகவே எழுதப்பட்டிருக்கும் பரலோகத்தின் புஸ்தகத்தைத் திறந்து காட்டி, அதாவது: இன்ன நாளில், இன்ன மணிக்கூரில், இன்ன நிமிஷத்தில், இன்ன வினாடியில் (செக்கண்டில்), இன்ன இடத்தில் வைத்து, இன்ன பாவத்தைச் செய்தான், இன்னின்ன பாவக் கிரியைகளை நடப்பித்தான் என்பது குறித்துத் தானாகவே கணக்கு எழுதப்பட்டிருக்கும் புஸ்தகத்தைத் திறந்து காட்டி, எந்தப் பாவியும் தான் நியாயத்தீர்ப்புக் கேற்ற பாவி தான், நரக ஆக்கினைக்கேற்ற பாவி தான், கொடியபாவிதான் என்று மறுக்காமல் ஒத்துக்கொள்ளச் செய்து, மகா நீதியாய் நியாயந்தீர்ப்பார். தான் செய்த பாவங்களுக்கேற்ற மகா நீதியான தண்டனை நரகம் தான் என்று மறுக்காமல் எவனும் ஒப்புக் கொள்ளுவான். நரகத்திலே தள்ளப்படுவான். மேலும்

கர்த்தர் பரிசுத்தவான்களின் பெயர் எழுதப்பட்டிருக்கும் ஜீவ புஸ்தகத்தையும் திறந்து காட்டுவார் (வெளிப்படுத்தல் 20:12-15).

**நரகம் :**

நரகம் நரகம் என்று அநேகர் வாய்ப்பாடமாகச் சொல்லுகிறார்கள், சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நரகம் என்றால் என்ன என்றோ, நரகத்தின் மகா பயங்கரம் எப்படிப்பட்டதென்றோ தெரிகிறதில்லை. பாவத்தின் சம்பளம் நரகம் என்று அநேகர் நம்புகிறதில்லை. நரகம் என்பது சாகாத புழுக்களும் அணைந்து போகாத அக்கினியும் நிறைந்ததான இடம். அக்கினியும் கந்தகமும் சேர்ந்து எரிகிறதான அக்கினிக்கடல். நரகத்தின் வேதனைக்கு ஒப்பிட்டுச் சொல்லத் தக்க எந்த வேதனையும் இந்த உலகத்தில் இல்லவே இல்லை. அவ்வளவு மகா கொடியவேதனை நிறைந்த இடம் நரகம். நரகத்திலே ஜனங்கள் சுண்ணாம்பைப் போல நீற்றப்படுவார்கள்: வெட்டப்பட்ட முட்செடிகளைப் போல தீயில் எரிக்கப்படுவார்கள். நரகத்திலே காணப்படும் புழுக்கள் அங்கே தள்ளப்படும்

ஜனங்களைத் துளைக்கும். தாகத்திற்கு ஒருதுளி தண்ணீர் கூட அங்கே கிடைக்காது. இப்படிப்பட்ட நரகத்திலே சகல பாவிகளும் இரவும், பகலும் சதா காலங்களிலும் வேதனையின் மேல், வேதனையடைந்து மகா பயங்கரமாய் வாதிக்கப்படுவார்கள். இரவும், பகலும் சதா காலங்களிலும் அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும். நரகத்திற்கு இரண்டாம் மரணம் என்ற பெயரும் உண்டு; பாதாளம் என்ற பெயரும் உண்டு. (வெளிப்படுத்தல் 21:8; மாற்கு 9:43-48; ஏசாயா 33:12; லூக்கா 16:19-26; மத்தேயு 25:30; சங்கீதம் 9:17).

## பரிசுத்தவான்களின் பரலோக ராஜ்யம் அதாவது சொர்க்க ராஜ்யம் அல்லது மோட்சலோகம் :

இப்பொழுது காணப்படும் வானமும், பூமியும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் மற்றும் யாவும் கர்த்தருடைய எரிச்சலின் அக்கினியினால் வெந்து உருகி அழிந்து ஒழிந்து போகும். சமுத்திரமும் இல்லாமற்போகும். (செப்பனியா 1:18; 2பேதுரு 3:12 ; வெளிப்படுத்தல் 21:1). பின்பு புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும். (ஏசாயா 65 : 17-19; 66:22; 2பேதுரு 3:13,14). அந்தப்புதிய பூமியில் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்

தேவலோகத்திலிருந்து இறங்கி வந்து ஸ்தாபிதமாகும். இதுவே பரலோக ராஜ்யம் அல்லது சொர்க்க ராஜயம் (வெளிப்படுத்தல் 21:1,2). பரலோக ராஜ்யத்தின் பிரகாசமும், மகிமையும் அழகும் எவராலும் வர்ணிக்கக் கூடாதவைகள். முத்துக்களாலான வாசல்களும், தங்கத் தெருக்களும், ஜீவத் தண்ணீருள்ள நதியும், மாதந்தோறும் வெவ்வேறு விதமான பன்னிரண்டு வித புது கனிகளைக் கொடுக்கும் ஜீவ விருட்சமும் உள்ள ராஜ்யம். அங்கு சந்திரனும், சூரியனும் இல்லை. தேவனுடைய மகிமையே அந்த ராஜ்யம் முழுவதையும் பிரகாசிப்பிக்கும்; அதன் விளக்கு கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவே. அங்கு இராக்காலம் இல்லை; எப்போதும் பகலாகவே இருக்கும். இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்த வான்களான தேவனுடைய பிள்ளைகள் மட்டும் அந்த ராஜ்யத்தில் பிரவேசித்து அதிலே நடப்பார்கள். அங்கே பசியும் இல்லை.; தாகமும் இல்லை.; உஷ்ணமும் இல்லை; குளிரும் இல்லை; துக்கமுமில்லை; கண்ணீருமில்லை; மரணமுமில்லை; அழுகையும் இல்லை; கூக்குரலுமில்லை; அலறுதலுமில்லை; வருத்தமுமில்லை; எந்த விதமான பிரயாசமும் இல்லை; கஷ்டமும் இல்லை; பயமும் இல்லை. மகிழ்ச்சியின்

மேல் மகிழ்ச்சி, ஆனந்தத்தின் மேல் ஆனந்தம், சந்தோஷத்தின் மேல் சந்தோஷம் நிறைந்த நாடு தான் பரலோக ராஜ்யம் (வெளிப்படுத்தல் 21:1-7, 10-27; 22:1-5).

பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு சிங்காசனங்கள் உண்டு. கிரீடங்கள் உண்டு, ஆளுகை உண்டு. அவர்கள் தேவனாகிய கிறிஸ்துவுக்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியருமாயிருந்து நித்திய, நித்திய காலமாகிய சதாகாலங்களிலும் ஆளுகையும் செய்வார்கள். அவரை ஆராதிக்கவும் செய்வார்கள். (வெளிப்படுத்தல் 1:6; 1பேதுரு 5:4; யாக்கோபு 1:12; 2தீமோத்தேயு 4:8, எபிரெயர் 8:5).

## மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்பதற்கான ஓர் தெளிவான திருஷ்டாந்தம்:

மரித்தோர் எப்படி உயிர்த்தெழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று அநேகர் கேட்கிறார்கள். அநேகர் இதெல்லாம் எப்படி நடக்கும் என்று அவிசுவாசம் கொள்ளுகிறார்கள்! மரித்தோரின் உயிர்த்தெழுதல் குறித்து கர்த்தருடைய சத்திய வேதமாகிய பைபிளில் கூறப்பட்டிருக்கும் திருஷ்டாந்தம் என்ன?

ஒருவன் நெல் அல்லது கோதுமை அல்லது வேறு ஏதாவது ஒரு தானியத்தை விதைக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது அவன் விதைக்கிற அந்த விதையானது செத்து, செத்த அந்த விதையிலிருந்து முளை முளைத்து அது திரும்ப உயிர் பெறுகிறது. "நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்க மாட்டாதே" விதைக்கிறதான விதை சாகாமல் அதிலிருந்து முளை உண்டாகிறதுமில்லை; அது திரும்ப உயிர் பெறுகிறதுமில்லை. மட்டுமல்ல விதைக்கிறதான அந்த விதையானது பின்பு உருவழிந்து காணப்படாமலும் போகிறது.

அவ்வண்ணமாகவே மாம்ச சரீரத்தோடு காணப்படுகிற ஒரு மனுஷன் மரித்தபின் அவனது சரீரத்தை மண்ணிலே வைத்துவிடுகிறார்கள். இந்த மாம்ச சரீரமாகிய ஜென்மசரீரம் விதையாகப் பூமியிலே வைக்கப்படுகிறது அல்லது விதைக்கப் படுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையிலே பூமியிலே வைக்கப்பட்ட அல்லது விதைக்கப்பட்ட இந்த விதையான ஜென்ம சரீரமானது முற்றிலும் அழிந்து காணப்படாமல் போய், அழிவில்லாத வேறொரு சரீரம், நெல் அல்லது இன்னொரு தானியத்தின் விதை செத்து

அதன்பின் உயிர் பெற்று முளைக்கிற வண்ணமாக, உயிர் பெற்று எழுந்திருக்கும். இது எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலினால், தேவாதி தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்யப்போகும், மகா வல்லமையான செயலே ஆகும். எனவே மரித்தோரின் உயிர்த்தெழுதல், இல்லையென்று யாரும் எண்ண வேண்டாம். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்பது மகா உண்மையும் மகா சத்தியமும் மகா நிச்சயமுமான காரியமாகும் (1 கொரிந்தியர் 15:35-44).

மேலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, மரித்தோரின் உயிர்த்தெழுதலில் முதல்வரானார். எனவே மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்பது மகா நிச்சயமாகிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்பது மகா நிச்சயமானதால், பாவிகளுக்கு நியாயத்தீர்ப்பும், நரகமும் உண்டென்பதும், பரிசுத்தவான்களுக்குப் பரலோக ராஜ்யம் உண்டென்பதும் மகா நிச்சயமாகிறது. (அப்போஸ்தலர் 26:23; 17:31).

கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலிருந்த போது கேட்டதான ஒரு கேள்வி என்னவென்றால்: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற்கு 8:36, 37). மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் என்றால்: மனுஷன் உலகம் முழுவதையும் சம்பாதித்துக் கொண்டாலும் என்பது பொருள். ஜீவனை என்றால்: ஆத்மீக ஜீவனை அல்லது ஆத்துமாவை அல்லது ஆத்மீகத்தை என்பது பொருள். ஒருவன் தனது ஆத்துமாவை நஷ்டப்படுத்தி பாவியாய் ஜீவித்து நரகத்துக்குப் போவானானால், அவனது மனுஷ ஜென்மத்தினால் எந்த லாபமும் இல்லை; எல்லாம் நஷ்டமே தான் என்பதே கருத்தாகும்.

'**மரணத்துக்குப்பின்**' என்ற தலைப்பில் மேலே எழுதப்பட்டிருப்பவை யாவும் மாற்றமில்லாத மகா சத்தியங்களாகும். எனவே யாரும் பாவிகளாய் ஜீவித்துத் தங்களது ஆத்மீக ஜீவனை நஷ்டப் படுத்தி,

மரணத்துக்குப்பின் உள்ள மகா பயங்கரமான நியாயத் தீர்ப்புக்கோ நரக ஆக்கினைக்கோ ஆளாகாமல், பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் கண்ணீரோடு அறிக்கை செய்து, பாவத்திலிருந்து விடுதலையாகிய இரட்சிப்பைப் பெற்று, பரிசுத்தவான்களாய் ஜீவித்து, பரலோக ராஜ்யத்தின் பாக்கியமாகிய சொர்க்க பாக்கியத்தைப் பெற ஆயத்தமான அனுபவத்தை அடைந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை மரணத்துக்குப் பின் உள்ள நியாயத்தீர்ப்புக்கும் நரக ஆக்கினைக்கும் நீங்கலாக்கி, பரலோக ராஜ்யமாகிய சொர்க்க பாக்கியத்தை அல்லது விண்ணுலக பாக்கியத்தைத் தந்து அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஆதி பெந்தெகொஸ்தே சத்தியசபை
தலைமை இடம் : மலவிளை

**சாது. C. செல்வ ராஜ் (ஐயா)**

ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை

மலவிளை ஜெபவீடு

தபால் பை எண் - 3, குலசேகரம் 629 161

கன்னியாகுமரி மாவட்டம்

தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி : 04651-277450

E-mail : bptc@dataone.in

Website : www.onegodonepeople-sadhuselvaraj.com